குறுக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் 4.30PM

அ.வ.எண் .24/2014 நாள் 16.09.2019 சிதம்பரம், .த/பெ.கருப்பக்கோனார்

DW1

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தலா 12 செண்டு 3 பேருக்கு பட்டா உள்ளது என்று முன்பு சாட்சியம் அளித்துள்ளேன். அதுசம்மந்தமாக அந்த பட்டா எண் என்னவென்றால் நினைவில்லை. அந்த பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அது எங்கள் கையில் உள்ளதா என்றால் இல்லை. எங்கே பார்த்தேன் என்றால் மணியகாரரிடம் பார்த்தேன். நான் சொல்வது போன்று தனிதனியாக தலா 12 செண்டுக்கு பட்டா கிடையாது என்றால் சரியல்ல. பட்டா எண் 1975 படி 36 செண்டுக்கும் பொட்டுக்கோனார் மகன் ரெங்கசாமி , க.சிதம்பரம் மற்றும் என் அண்ணன் க.ரெங்கசாமி ஆகியோர் பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்றால் சரிதான். எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய விவரம் சொன்னது நான்தான். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எத்தனை அயிட்டத்திற்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் 2. அ பட்டி சொத்து விவரத்தில் எத்தனை செண்டுக்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சர்வே எண் 70/74ஏ ல் 24 செண்டு, சர்வேஎண் 70/74 பீ-ல் 12 செண்டு. ஆ பட்டி சொத்து விவரம் தெரியுமா என்றால் அதுதான் 12 செண்டு. ஆ பட்டி சொத்து எங்குள்ளது என்றால் 36 செண்டில் ஆக கீழ்புறம் 12 செண்டு உள்ளது. வழக்கு சொத்துகளில் வாதி வகையறாவிற்கு எந்த சொத்தில் பங்கு என்றால் அவருக்கு 12 செண்டு அதில் பொட்டுக்கோனாருக்கு 6 செண்டு, ரெங்க கோனாருக்கு 6 செண்டு. அது மேல்புறம் கடைசியில் உள்ளது. அது கிழக்கே உள்ளது என்று சொன்னால் தவறு என்றால் சரியல்ல. நடுபுறம் 12 செண்டு மீனி கருப்பக்கோனார் மகன் பெரியதம்பிக்குரியது. கீழ்புறம் உள்ள 12 செண்டு ரெங்கசாமி கோனாருக்கும் முத்து சாமி கோனாருக்குரியது. ஆ பட்டி சொத்து பெரியதம்பிக்கு பாத்தியம் என்பதை காண்பிக்க ஆவணம் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் அது பூர்வீக சொத்து ஆவணம் இல்லை. பூர்வீகத்திற்கு பட்டா இருக்கிறதா என்றால் நான் பார்க்கவில்லை. அ பட்டி 2 வது அயிட்ட சொத்து ஆதியில் யாருக்கு சொந்தமென்றால் அடியான் கோனார் மகன் முத்தக் கோனாரிடம் சுப்பன் செட்டியார் வாங்கினார். அதற்கு பத்திரம் இருக்கா என்றால் புயலில் காணாமல் போனது அதனால் இல்லை. அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்திருப்பார். மேற்படி விவரத்தினை என் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சுப்பன் செட்டியார் மகன் பெயர் சிதம்பர செட்டியார். என் அப்பா சுப்பன் செட்டியாரிடம் கிரயம் வாங்கினாரா என்றால் சிதம்பர் செட்டியாரிடம். சுப்பன்செட்டியாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பையன்கள். சிதம்பர செட்டியாருக்கு சொத்து எப்படி கிடைத்தது என்று தெரியுமா என்றால் வாய்மொழி பாக பிரிவினையின் மூலம் கிடைத்தது. எனது எதிர்வழக்குரையில் மேற்படி விவரத்தினை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சுப்பன் செட்டியாரிடமிருந்து சிதம்பர செட்டியாருக்கு சொத்து கிடைத்ததற்கு ஆவணம் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். என் அப்பா சிதம்பர செட்டியாரிடமிருந்து கிரயம் வாங்கியதற்கு பத்திரம் உண்டா என்றால் இல்லை. தாவா அ பட்டி சொத்துக்கள் பொட்டு கோனார் மற்றும் அவரது தம்பி ரெங்க

கோனாருக்கும் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. அ அட்டவணை 1, 2 சொத்துக்களிடையே ஆ அட்டவணை சொத்து உள்ளது என்றால் சரிதான். மொத்தம் 36 செண்டில் தற்போது யார் யார் வசிக்கிறார் என்றால் ரெங்கசாமி கோனார் கீழ்புறத்தில் வடபுறம், குப்புசாமி கோனார் ரெங்கசாமிக்கு தென்புறம். ரெங்கசாமி வீட்டிற்கு மேற்குபுறம் யார் உள்ளது என்றால் வாதி சூரியமூர்த்தி, அடியான், பெரியசாமி, தாமரை செல்வன், நல்லம்மாள். அவர்களுக்கு ஒரே வீட்டில் 4 வாசற்படி உள்ளது. அந்த இடத்தில் 3 வீடுகளை தவிர வேறு வீடு இல்லை என்றால் சரியல்ல என் வீடு அங்குதான் உள்ளது. என் வீடு எங்குள்ளது என்றால் சூரியமூர்த்தி வீட்டின் தென்புறம் உள்ளது. அதாவது ஆ பட்டி சொத்தில் என் வீடு உள்ளது. வீடு இருப்பதை நீதிமன்றம் மூலம் பார்வையிட்டால் தெரியுமா என்றால் தெரியும் வீடு உள்ளது. நான் சொல்வது போன்று வாதி மற்றும் 1முதல் 3 பிரதிவாதிகளின் வீட்டிற்கு தென்புறத்தில் என் வீடு கிடையாது என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு கிழக்கே யார் வீடு என்றால் அண்ணன் குப்புச்சாமி வீடு. 17.07.2013 ல் பெரியதம்பி கோனாருக்கு யார் யார் கிரயம் கொடுத்தது என்றால் 4 1/2 செண்டை நானும் 11ம் பிரதிவாதியான என் மகனும் கொடுத்தோம். மேலும் 3 செண்டை சேகர் மனைவி ஜெயலெட்சுமிக்கு எழுதி கொடுத்தோம். வா.சா.ஆ.3 ல் நான்கெல்லை விவரத்தில் பொ.ரெங்கசாமி மனை புஞ்சைக்கு தெற்கு எங்கள் புஞ்சைக்கு மேற்கு, கருப்பையன் இடத்திற்கு வடக்கு, ஜெயலெட்சுமி இடத்திற்கு கிழக்கு என்று உள்ளது என்றால் சரிதான். எங்கள் புஞ்சைக்கு மேற்கு என்று குறிப்பிட்டுள்ளது பெரியதம்பிக்கு கிழக்கே யார் இடம் உள்ளது என்றால் என் இடம் உள்ளது. எங்கள் புஞ்சை என்பது என்னையும் என் மகனையும் குறிக்கும். 36 செண்டில் எனக்கு எவ்வளவு உள்ளது என்றால் 9 1/2 செண்டு. ஜெயலெட்சுமிக்கு விற்றது மேற்குபுறம் உள்ளது. பாக்கி 2 செண்டு எங்குள்ளது என்றால் பெரியதம்பிக்கு கீழ்புறம் 1 1/2 செண்டு உள்ளது. வண்டி பாதை 1 /2 செண்டு. மீனி பெரியதம்பியிடம் வாங்கிய சொத்தில் தற்போது எவ்வளவு வைத்துள்ளேன் என்றால் 1 1/2 செண்டு வைத்துள்ளேன். 1/2 செண்டு வண்டிப்பாதை ஆக கூடுதல் 2 செண்டு. 13ம் பிரதிவாதியான ராமக்கோனார் மகன் பெரியதம்பியிடம் விற்றது எவ்வளவு என்றால் 3 செண்டில் 1 1/2 செண்டும் பூர்வீக சொத்தில் 3 செண்டு. ஆக மொத்தம் 4 1/2 செண்டு. ஜெயலெட்சுமியிடம் பூர்வீக சொத்தில் 3 செண்டு கொடுக்கப்பட்டது. கு.கருப்பையன் என்பது என் அண்ணன் மகன் 14ம் பிரதிவாதி. அவருக்கு நான் பெரியதம்பியிடம் விற்ற சொத்திற்கு தென்புறம் எவ்வளவு என்றால் 4 செண்டு.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

மறு விசாரணை இல்லை.
இத்துடன் குறுக்கு விசாணை முடிக்கப்பட்டது.
குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 5.20PM

Sd/- சிதம்பரம்,

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- G. Sathiakumar,
District Munsif, Pattukkottai,(FAC)